DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 63/2022
Miscellaneous :
Sessions : PW 1
Deposition of Witness for
எதிரி ஆஜரில்லை 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது
Name
சாய்பிரசாத்
Father/Husband Name
பாஸ்கரன்
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 27.06.2024
குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. எனது சிட்டி யூனியன் வங்கி கணக்கை எப்போது துவங்கினேன் என்றால் 2018 ம் ஆண்டு துவங்கினேன். 2018 ற்கு பிறகு எதிரி எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பியிருக்கிறாரா என்றால் அனுப்பியிருக்கிறார். 5000 அல்லது 10000 ரூபாயை ஒவ்வொரு முறையும் அனுப்பியிருக்கிறார் எத்தனை முறை அனுப்பியிருக்கிறார் என்று தெரியவில்லை. கடைசியாக எப்போது அனுப்பினார் என்று தெரியவில்லை. எதற்காக பணம் அனுப்பினார் என்றால் வாங்குவார் அல்லது கொடுப்பார். எங்களுக்கிடையே கொடுக்கல் வாங்கல் வங்கி மூலம் தான் நடந்தது என்றால் சரிதான்.

2. 29-01-2022 ம் தேதி காசோலை திரும்பியதற்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன். எந்த தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 01-04-2022 ல் அனுப்பினேன். 29-01-2022 ம் தேதி காசோலை திரும்பியதற்கு 01-04-2022 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அதற்கு முன்னர் நான் எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை. எதிரியிடமிருந்து அதே போல் எந்த பதிலும் வரவில்லை என்றால் சரிதான். மேலே சொன்ன விவரங்கள் குறித்து புகாரில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை.

3. காசோலை திரும்பிய 30 நாட்களுக்குள் பணம் கேட்பு அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் அறிவிப்பு அனுப்பாததால் இரண்டாவதாக காசோலையை வங்கியில் செலுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய அறிவிப்பிலும் புகாரிலும் எதிரியின் கடை வைத்து பணம் கொடுத்ததாக விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த வியாபாரமும் இல்லை. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. எனது அப்பா வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறாரா என்றால் இல்லை. எனது அப்பா யாரிடமாவது கடன் வாங்கியிருக்கிறாரா என்றால் இல்லை.

4. நெல் விற்ற பணத்தை கடனாக கொடுத்ததாக புகாரிலும் அறிவிப்பிலும் சொல்லியிருக்கிறோனா என்றால் இல்லை. சேகர் குமார் என்ற உரிமையாளரின் கருங்குழியில் உள்ள ரைஸ் மில்லில் நெல்லை விற்பனை செய்தேன். 300 மூட்டை நெல் விற்பனை செய்ததால் 5 லட்சம் கிடைத்தது. நான் சொல்வது போல் ஒரு காலத்திலும் 300 மூட்டை நெல் விற்கவில்லை என்றாலும் நெல் விற்பனை செய்து கடன் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அப்பாவிற்கு விவசாய நிலம் இல்லை என்றால் சரியல்ல. 10-10-2021 ம் தேதி என்னிடம் 5 லட்சம் பணம் இருந்ததற்கான ஆவணத்தை நிதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு 5 லட்சம் கொடுக்கவில்லை என்றாலும் 5 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு போதிய வசதி வாய்ப்பு இல்லை என்றாலும் சரியல்ல. வருமான வரி சட்டத்தின் கீழ் ரூபாய் 20 ஆயிரத்திற்கும் மேல் நேரடியாக பண பரிவர்த்தனை செய்யமுடியாது என்றாலும் ருபாய் 5 லட்சம் ரொக்கமாக கொடுத்தது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் எதிரியை இந்த வழக்கு கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.